பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**18 11 2025 TUESDAY 7.15 PM**

ஆகாஷவாணி

## தலைப்புச் செய்திகள்

**1)** பாதுகாப்பான குடிநீர் வழங்க அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கேட்டுக்கொண்டுள்ளார்.

**2)** நாட்டில் மாநகரங்களின் வளர்ச்சிக்காக மத்திய - மாநில அரசுகள் இணைந்து செயல்பட வேண்டும் என்று மத்திய அமைச்சர் திரு மனோகர்லால் கட்டார் வலியுறுத்தியுள்ளார்.

**3)** வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணியின் இரண்டாவது கட்டத்தில் **50** கோடியே **97** லட்சம் விண்ணப்பங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

**4)** பீகாரில் நாளை நடைபெறும் தேசிய ஜனநாயக கூட்டணி சட்டப்பேரவை உறுப்பினர்கள் கூட்டத்தில் முதலமைச்சர் தேர்வு செய்யப்பட உள்ளார்.

**5)** காஸா பகுதியில் அமெரிக்க அதிபர் திரு டொனால்டு ட்ரம்ப் கொண்டுவந்த அமைதித் திட்டத்திற்கு ஐ நா பாதுகாப்பு கவுன்சில் ஒப்புதல் அளித்துள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<>>>>>

பாதுகாப்பான குடிநீர் வழங்க அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கேட்டுக்கொண்டுள்ளார்.

புதுதில்லியில் தேசிய நீர் விருதுகளை வழங்கி பேசிய அவர், நாட்டின் நீர்வளம் குறைவாகவே இருப்பதால், தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தினார்.

தண்ணீர் சேமிப்பு தொடர்பான திட்டத்தின் மூலம் கடந்த ஆண்டு 35 லட்சம் நிலத்தடி நீர் நிலைகள் அமைக்கப்பட்டுள்ளதாக திருமதி திரௌபதி முர்மு கூறினார்.

இந்நிகழ்ச்சியில், மத்திய நீர்வளத்துறை அமைச்சர் திரு சி ஆர் பாட்டீல், மத்திய இணையமைச்சர்கள் திரு சோமண்ணா, திரு ராஜ் பூஷன் சௌத்ரி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

சிறந்த மாநிலம், மாவட்டம், கிராம பஞ்சாயத்து, நிறுவனம், பள்ளி உள்ளிட்ட 10 பிரிவுகளில் 46 விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

<<<<<>>>>

நாட்டில் மாநகரங்களின் வளர்ச்சிக்காக மத்திய அரசும், மாநில அரசுகளும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று மத்திய நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் திரு மனோகர்லால் கட்டார் தெரிவித்துள்ளார்.

ஹைதராபாதில் தென்மேற்கு மாநிலங்களின் நகர்ப்புற வளர்ச்சி தொடர்பான கூட்டத்தில் இன்று உரையாற்றிய அவர், வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை எட்டுவதற்கு ஒவ்வொரு கிராமமும், ஒவ்வொரு பகுதியும், ஒவ்வொரு மாநிலமும் வளர்ச்சியடைய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

நாட்டின் நகர்ப்புற மக்கள் தொகை விரைவில் 50 சதவீதத்தை எட்டும் என்று அவர் கூறினார்.

மேலும், நகர்ப்புற பகுதிகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதம் தற்போதைய 60 சதவீத்தில் இருந்து, வரும் 2050-ஆம் ஆண்டுக்குள் 80 சதவீதமாக அதிகரிக்கக்கூடும் என்றும் அவர் தெரிவித்தார்.

நான்கு லட்சம் கோடி ரூபாய் நகர்ப்புற நிதியம் மூலம் மாநகரங்களை பொருளாதார மையங்களாக மாற்றுவதற்கான திட்டம் செயல்படுத்தப்படும் என்று திரு மனோகர்லால் கட்டார் கூறினார்.

<<<<<>>>>>

உலக நாடுகள் ஒன்றிணைந்து தீவிரவாதத்திற்கு எதிராக செயல்பட வேண்டும் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

ரஷ்ய தலைநகர் மாஸ்கோவில் ஷாங்காய் ஒத்துழைப்பு மாநாட்டில் உரையாற்றிய அவர், தீவிரவாதத்தை ஒருபோதும் அனுமதிக்க முடியாது என்று திட்டவட்டமாக தெரிவித்தார்.

பருவநிலை மாற்றம், தொற்றுநோய் பரவல், உள்ளிட்ட பிரச்சினைகளால், உலக நாடுகள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், மனிதநேய அடிப்படையில் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டியதன் அவசியத்தை திரு ஜெய்சங்கர் வலியுறுத்தினார்.

<<<<>>>>

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணியின் இரண்டாவது கட்டத்தில் இதுவரை 50 கோடியே 97 லட்சம் விண்ணப்பங்கள் வாக்காளர்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

இரண்டாவது கட்டத்தில் மொத்தம் உள்ள 51 கோடி வாக்காளர்களில் 98 புள்ளி ஐந்து நான்கு சதவீதம் பேருக்கு விண்ணப்பங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணியின் இரண்டாவது கட்டம் கடந்த நான்காம் தேதி தமிழகம் உட்பட ஒன்பது மாநிலங்களிலும், 3 யூனியன் பிரதேசங்களிலும் தொடங்கி நடைபெற்று வருகிறது.

உத்தரப்பிரதேசத்தில் 15 கோடி விண்ணப்பங்களும், மேற்குவங்கத்தில் ஏழு கோடி விண்ணப்பங்களும் விநியோகிக்கப்பட்டுள்ளன.

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகள் மேற்கொண்ட பின்னர் அடுத்த ஆண்டு பிப்ரவரி 7-ஆம் தேதி இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

<<<<<>>>>>

இந்தியா — அமெரிக்கா இடையேயான உறவுகள் பொருளாதார ரீதியாக வலுவடைந்து வருவதாக மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இந்தியா — அமெரிக்கா வர்த்தக அமைப்பின் கூட்டத்தில் இன்று உரையாற்றிய அவர், இருநாடுகள் இடையேயான உறவுகள் ஜனநாயகம், வேற்றுமை, வளர்ச்சி இலக்கு என்ற தொலைநோக்கு பார்வையின் அடிப்படையில் வலுவாக உள்ளதாக கூறினார்.

நாட்டில் விவசாயிகள், மீனவர்கள், சிறு தொழில் முனைவோர்களின் நலனை கருத்தில்கொண்டு வெளிநாடுகள் உடனான

வர்த்தக கொள்கைகள் உருவாக்கப்படுவதாக திரு பியூஷ் கோயல் குறிப்பிட்டார்.

<<<<<>>>>>

பீகார் சட்டப்பேரவைத் தேர்தலில் பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றிபெற்றதையடுத்து, தலைநகர் பட்னாவில் அக்கூட்டணியின் சட்டப்பேரவை உறுப்பினர்கள் நாளை கூடி முதலமைச்சரை தேர்வு செய்ய உள்ளனர்.

பிஜேபி, ஐக்கிய ஜனதாதளம், லோக் ஜனசக்தி, இந்துஸ்தானி அவாமி மோர்ச்சா, ராஷ்ட்ரிய லோக் மோர்ச்சா ஆகிய கட்சிகளின் **202** சட்டப்பேரவை உறுப்பினர்கள் இக்கூட்டத்தில் பங்கேற்க உள்ளனர்.

இக்கூட்டத்தில், திரு நிதிஷ்குமார், முதலமைச்சராக மீண்டும் தேர்வு செய்யப்படக்கூடும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

முன்னதாக, பிஜேபி மற்றும் ஐக்கிய ஜனதாதள கட்சியை சேர்ந்த புதிய சட்டப்பேரவை உறுப்பினர்கள் தனித்தனியாக ஆலோசனை மேற்கொண்டு சட்டப்பேரவைக் கட்சித் தலைவரை தேர்ந்தெடுக்க உள்ளனர்.

இதனிடையே, பிஜேபி சட்டப்பேரவைத் தலைவரை தேர்ந்தெடுப்பதற்காக கட்சியின் மத்திய பார்வையாளராக உத்தரப்பிரதேச துணை முதலமைச்சர் திரு கேஷவ் பிரசாத் மௌரியாவை பிஜேபி நியமித்துள்ளது.

மேலும், மத்திய அமைச்சர் திரு அர்ஜுன் ராம் மெக்வால், முன்னாள் அமைச்சர் சாத்வி நிரஞ்சன் ஜோதி ஆகியோரும் கட்சியின் மத்திய பார்வையாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

<<<<<>>>>>

காசி தமிழ் சங்கமம் தொடர்ந்து நான்காவது ஆண்டாக நடைபெறவுள்ளது.

அடுத்த மாதம் **2**-ஆம் தேதி தொடங்கி, **15**-ஆம் தேதிவரை நடைபெறவுள்ள இந்த நிகழ்வு, தமிழ் கற்கலாம் என்ற மையக்கருத்துடன் நடைபெறவுள்ளதாக வாரணாசி ஆணையர் திரு ராஜலிங்கம் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

***(Voice Byte — ராஜலிங்கம் - 40 Sec. )***

<<<<<>>>>>

ஏழை மக்களுக்கு குறைந்த செலவில் உணவு தானியங்கள் வழங்க அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக மத்திய நுகர்வோர் விவகாரங்கள் மற்றும் உணவுத்துறை அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில், உணவு தானிய கிடங்குகளை நவீன மயமாக்கும் திட்டத்தை இன்று தொடங்கிவைத்து பேசிய அவர், பிரதமரின் கதிசக்தி திட்டத்தின்மூலம், உணவு தானியங்கள் நாடு முழுவதும் பல்வேறு பகுதிகளுக்கு விரைந்து அனுப்பி வைக்கப்படுவதாக கூறினார்.

தொழில்நுட்ப பயன்பாட்டின் மூலம் ஏழை எளிய மக்களுக்கு உணவு தானியங்களை தடையில்லாமல் வழங்க நடவடிக்கை எடுத்துவருவதாக திரு பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்தார்.

<<<<<>>>>>

நவிமும்பை சர்வதேச விமான நிலையத்தில் அடுத்த மாதம் 25ஆம் தேதி முதல், வர்த்தக ரீதியிலான சேவை தொடங்கும் என்று விமான நிலைய நிர்வாகம் தெரிவித்துள்ளது.

முதற்கட்டமாக, காலை 8 மணி முதல் இரவு 8 மணிவரை இந்த விமான நிலையம் இயங்கும் என்றும் தினந்தோறும், 23 விமானங்கள் இங்கிருந்து புறப்பட்டுச் செல்லும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு மணி நேரத்திற்கு 10 விமானங்களை கையாளும் வசதி செய்யப்பட்டுள்ளதாக விமான நிலைய அதிகாரிகள் கூறியுள்ளனர்.

<<<<<>>>>>

காஸா பகுதியில் அமெரிக்க அதிபர் திரு டொனால்டு ட்ரம்ப் கொண்டுவந்த அமைதித் திட்டத்திற்கு ஐ நா பாதுகாப்பு கவுன்சில் ஒப்புதல் அளித்துள்ளது

இதுதொடர்பான வாக்கெடுப்பில் 13 உறுப்பு நாடுகள் ஆதரவாக வாக்களித்தன.

ரஷ்யாவும், சீனாவும் இந்த வாக்கெடுப்பில் பங்குபெறவில்லை.

இந்த அமைதித் திட்டத்தின்கீழ், காஸா பகுதியில் சர்வதேச அமைதிப்படையை நிலைநிறுத்தவும், பாலஸ்தீன தொழில்நுட்ப நிபுணர் குழுவை அமைக்கவும் முடிவெடுக்கப்பட்டிருந்தது.

இந்த திட்டத்திற்கு ஐ நா பாதுகாப்பு கவுன்சில் ஆதரவு அளித்துள்ளதற்கு இஸ்ரேல் வரவேற்பு தெரிவித்துள்ளது.

இருப்பினும், ஹமாஸ் அமைப்பு இந்த திட்டத்தை எதிர்த்து வருகிறது.

<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

தாய்லாந்தில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Sonal Patil** காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், **6-2, 6-2** என்ற செட் கணக்கில் இந்தியாவின் **Ashmitha Easwaramurthy** -ஐ வென்றார்.

மற்றொரு ஆட்டத்தில், இந்தியாவின் அதிதி ராவத் — தாய்லாந்தின் **Chotirin Kaewka**-வை வென்று காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறினார்.

---------

ஆஸ்திரேலிய ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் சாத்விக் சாய்ராஜ் - சிராக் ஷெட்டி இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

------------

சிட்னியில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை **25-23, 21-16** என்ற செட் கணக்கில், தைவானின் **Ko Chi Chang — Li Wei Po** இணையை வென்றது.

**<<<<<END>>>>**